# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 29.07.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் அருளால் U.K. ஜல்ஸா ஸாலானா கடந்த ஞாயிறு அன்று அல்லாஹ்வுடைய எண்ணற்ற அருள்களையும் ரஹ்மத்துகளையும் கருணைகளையும் வெளிப்படுத்தியவாறு நிறைவு பெற்றது.

M.T.A. மூலமாக ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்களிடமிருந்து எனக்கு கடிதங்கள் வருகின்றன. அல்லது நேரடியாக கலந்து கொண்டவர்களுடைய கடிதங்கள் வருகின்றன. அல்லது கலந்து கொண்டவர்கள் வாய்மொழியாக தமது தாக்கங்களை வெளிப்படுத்தியுள்ளனர். நாங்கள் அல்லாஹ்வின் அருள்களையும் கருணையின் மழையையும் பொழிவதைக் கண்டோம் என்று கூறியுள்ளனர். இந்த உணர்வுகள், உணர்ச்சிகள், ஒவ்வொருவரும் தமக்குள் உணர்ந்த தூய மாற்றங்கள், ஒவ்வொருவரும் கண்டுணர்ந்த இறையருள்களின் தூய விளைவுகளைத் தற்காலிகமாக அல்லாமல் அதனை நிரந்தரமாக அல்லாஹ் ஆக்குவானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருப்பங்கள், எதிர்பார்ப்புகளை நாம் எப்போதும் நிறைவேற்றிக் கொண்டே செல்பவர்களாக ஆவோமாக!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத் கூறுகின்ற விஷயங்கள் வெறும் வார்த்தையோடு நின்று விடக் கூடாது. இது அசல் நோக்கமுமல்ல. மாறாக உளத்தூய்மையுடன் சீர்திருத்தம் அவசியமாகும். அதற்காகவே அல்லாஹ் என்னை நியமித்துள்ளான்.

நமது உணர்வுகள், உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்போது அது பேச்சளவில் மட்டும் இருக்கக் கூடாது. தற்காலிக ஆர்வத்தின் வெளிப்பாடாக மட்டும் இருக்கக் கூடாது. மாறாக இந்த எல்லா உணர்வுகளும் உணர்ச்சிகளும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கின்ற நோக்கத்தைப் பெறும் ஊடகமாக வேண்டும். கடிதங்கள் மூலமாகவும் வாய்மொழியாகவும் வெளிப்படுத்துகின்ற இந்த உணர்வுகள் நமது நிலைகளிலும் செயல்களிலும் வெளிப்பட வேண்டும். இந்த ஜல்ஸாவின் சூழ்நிலை மூலம் நமது உள்ளம் தூய்மை அடைந்திருந்தால் அதனை நிரந்தரமாக நமது வாழ்வின் அங்கமாக ஆக்கும் போதுதான் உண்மையான நோக்கம் நிறைவேறும். சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டிருந்தால் நமது நோக்கம் நிறைவேதற்கு தொடர்ந்து முயற்சியும் செய்வோம். எப்போதும் இதனை நினைவில் கொள்ளுங்கள். ஜல்ஸாவுக்காக ஏகப்பட்ட செலவுகள் செய்யப்படுகின்றன. காலத்தின் கலீஃபா மூலமாகவும் ஜமாஅத் அமைப்பின் மூலமாகவும் தூய்மை மற்றும் சீர்திருத்தத்திற்காக முயற்சி செய்யப்படுகிறது. இதனை நாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் வழியாக ஆக்க வேண்டும். இதன் பக்கம் முழுமையாக முயற்சி செய்யப்பட்டால் நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர்கள் ஆவோம். ஜல்ஸாவின் அருளிலிருந்து நிரந்தர அருள் பெறுவோம். அப்போது தான் நாம் நன்றி செலுத்துதல் மூலமாக தனிப்பட்ட முறையிலும் ஜமாஅத் அளவிலும் அல்லாஹ்வின் அருள்களை மேலும் பெறுபவர்கள் ஆக முடியும். இது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து தரப்பட்ட அறிவிப்பாகும்.

**லயின் ஷகர்த்தும் லஅஸீதன்னகும் – நீங்கள் நன்றி செலுத்தினால் நான் இன்னும் அதிகமாகத் தருவேன். (14:8).** அல்லாஹ் இந்த வசனத்தில் தெளிவான ஓர் அடிப்படை இலக்கணத்தின் பக்கம் கவனமூட்டுகிறான். உங்கள் முன்னேற்றம் அல்லாஹ்வினால் தரப்பட்ட அருள்களை சரியான முறையில் பயன்படுத்துவதுடன் தொடர்புடையதாகும். மாறாக இந்த நிஃமத்துகளுக்கு நன்றி செலுத்தவில்லையாயின்

அது வெறும் வாய்பேச்சாகி விடும். ஜல்ஸாவைப் பார்த்தோம்; பயனடைந்தோம் என்பதெல்லாம் வாய்பேச்சாகும். ஜல்ஸாவை நமக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்தும் வழியாக ஆக்கும் போது தான் உண்மையான பயன் கிடைக்கும். அல்லாஹ்வின் அருள் மழை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது ஒருபோதும் முடிவடையாது. ஒவ்வொரு நாளும் நான் கடிதங்களைப் பார்க்கும் போது ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் அல்லாஹ்வின் அருள் மழைகளைப் பார்க்கின்றேன். பிறகு சுற்றுப்பயணத்தின் போது ஜல்ஸாக்களில் கலந்து கொள்ளும் போது இந்த வியத்தகு காட்சியைக் காண்கின்றேன். அஹ்மதிய்யா ஜமாஅத் ஒவ்வொரு வினாடியும் ஓர் ஜமாஅத் என்ற முறையில் இறை அருளைப் பார்த்தவாறு செல்கிறது. ஆனால் ஒவ்வொரு அஹ்மதி மீதும் தனிப்பட்ட முறையில் நன்றியை வெளிப்படுத்தும் உணர்வு வர வேண்டும். அல்லாஹ்வின் அருள்களுக்கு நன்றி செலுத்தும் தன்மை ஒவ்வோர் அஹ்மதிக்கும் வேண்டும். அதற்கான சிறந்த வழி அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறும் வரை விடா முயற்சி செய்வதாகும். ஜமாஅத்திற்கு கிடைத்த அருள்களைப் பற்றி கூறினேன். கடந்த மாதம் ஜெர்மனி ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்தேன். அங்கு ஜல்ஸா நிகழ்ச்சிகள் தவிர இன்னும் சில நிகழ்ச்சிகளும் இருந்தன. அல்லாஹ்வின் அருளால் அவை வெற்றிகரமாக நடந்தன. அதற்காக நன்றி செலுத்துவது பற்றியும் அல்லாஹ் தனது அருள்களின் மழையை அங்கு பொழிந்ததைப் பற்றியும் பேசும் போதே U.K. ஜல்ஸாவும் அல்லாஹ்வின் அருளின் மழைகளைப் பொழிந்தவாறு வந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்த பிறகு ஓர் அஹ்மதி எதற்கும் முக்கியத்துவம் அளிப்பதில்லை. எனது சொந்த விருப்பமே இறை திருப்தி மற்றும் ஜமாஅத்துடன் தொடர்புடையதாகி விட்டது என்று உணர்ந்தவாறு எப்போதும் நன்றி ஸஜ்தா செய்கிறார். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தந்த வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றுகிறான் பாருங்கள். எத்தகைய வெகுமதிகளை நமக்கு வழங்கி இருக்கின்றான். நமது ஆன்மீக முன்னேற்றத்திற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றான். நமது இபாதத்துகளின் தகுதியை உயர்த்தவும் அவ்வப்போது சந்தர்ப்பம் தருகின்றான். பிறகு நமது ஆன்மீக நல்லொழுக்க மேம்பாட்டிற்காக சில நாட்களுக்குப் பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தையும் ஏற்பாடு செய்து தரவுள்ளான். அது ரமலானின் அருள்களின் வடிவில் வருவிருக்கிறது இன்ஷா அல்லாஹ்.

எனவே நமது நற்செயலின் மேம்பாட்டிற்கான முயற்சியும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து ஏற்பாடு செய்து தரப்பட்ட சந்தர்ப்பங்களிலிருந்து முழுமையாகப் பயன்பெறும் போது தான் நாம் நன்றி செலுத்தியவர்கள் ஆவோம். பிறகு முன்னரை விட அதிகமாக இறைவனது அருள்மழை நம்மீது பொழியக் காண்போம் இன்ஷா அல்லாஹ். எனவே இந்த ஜல்ஸாவின் அருள்களை ரமலானின் அருள்களில் நுழைத்தவாறு ரமலானின் ஆன்மீக சூழலிலிருந்தும் முழுமையாகப் பயனடைய முயற்சி செய்ய வேண்டும். நமக்குள் உணர்ந்த தூய மாற்றங்களை இன்னும் மெருகூட்ட ரமலானின் முயன்றால்தான் ஜல்ஸாவின் வெற்றிகரமான நிகழ்விற்கு உண்மையான செலுத்துபவர்களாவோம். எனவே நாம் ஜல்ஸாவுக்கு வந்தவர்களை தனிப்பட்ட முறையில் ஒட்டுமொத்தமாகவும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. குறிப்பாக அதில் சிலர் இவ்வாறு கூறினர். இந்த வருடம் இளைஞர்களின் கணிசமானவர்கள் தஹஜ்ஜுத் தொழுகைக்கு வந்தனர். கூடாரங்களில் ஜமாஅத்தாக தஹஜ்ஜுத் தொழுகை நடைபெற்றது. இந்த தஹஜ்ஜுத் தொழுகைக்கு வந்தவர்களில் சிறுவர்களின் எண்ணிக்கை சென்ற வருடங்களை விட மிகவும் அதிகமாக இருந்தது. ஒரு தந்தை என்னிடம் கூறினார்: அவரது மகன் 14-15 வது சிறுவன். அவன் தொழுகைக்கு செல்வதே அரிது. இப்போது மூன்று நாட்களிலும் ஒரேயொரு குரல் கொடுத்ததும் தஹஜ்ஜுத்திற்காக எழுந்து உட்கார்ந்து விட்டான்.

எனவே அல்லாஹ்வின் அருள்களை நிரந்தரமாகப் பெறுவதற்கு இந்த மாற்றங்களை வாழ்வின் அங்கமாக்க ஒவ்வொரு பெரியவர் சிறியவர் ஆண்கள் பெண்கள் ஆகியோர் முயற்சி செய்ய வேண்டும். இன்னும் சில நாட்கள் கழித்து இன்னொரு ஆன்மீக சூழல் ஒன்றை அல்லாஹ் நமக்கு மீண்டும் தரவுள்ளான். அது நமது நற்பேறாகும். நான் முன்னர் கூறியது போன்று ரமலான் மாதம் இன்ஷா அல்லாஹ் ஆரம்பமாக உள்ளது. அதிலிருந்தும் முழுமையாகப் பயனடையுங்கள். அப்போதுதான் நம்மிடம் முடிவடையாத நன்றி

உணர்வு ஏற்படும். அல்லாஹ்வின் **லஅஸீதன்னகும் – மேலும் அதிகமாக்கித் தருவேன் (14:8)** என்ற வாக்குறுதிலியிருந்து பயன் பெறுபவர்களாவோம். அல்லாஹ் நமக்கு அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக. எனது நடைமுறையின்படி ஜல்ஸா சம்பந்தமான குறிப்புகள் ஜல்ஸாவுக்குப் பிறகு குத்பாவில் கூறப்படும். இது பெருமை அளிக்கும் விதத்தில் அல்ல. நமது முயற்சியின் வெற்றியைப் பற்றி தொண்டர்களோ அமைப்போ பேசுவதில்லை. அதுபற்றி பேசப்படுவதும் இல்லை. எனினும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காக இது குறிப்பிடப்படுகிறது. ஒருவர் மற்றவருக்கு நன்றி செலுத்துவதற்காக இது பேசப்படுகிறது. அடியார்களுக்கு நன்றி செலுத்துவதும் அவசியமாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: எவர் அடியார்களுக்கு நன்றி செலுத்துவதில்லையோ அவர் அல்லாஹ்வுக்கும் நன்றி செலுத்தமாட்டார். இதன் அடிப்படையில் இந்த நன்றி செலுத்தும் கருத்து இங்கு கூறப்படுகிறது. பிறகு நம் முன் வருகின்ற சம்பவங்களால் ஈமானின் உறுதி இன்னும் அதிகமாகிறது. சிறுவர்கள், இளைஞர்கள் தஹஜ்ஜுத்தின் பக்கம் கவனம் செலுத்துகிறார்கள் என்று குறிப்பிட்டேன். பெற்றோர்கள் இதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவனே நமது சிறுவர்களிடம் இதன் பக்கம் கவனமூட்டினான். அதற்கான உண்மையான நன்றி உடைமையானது பெற்றோர் முதலில் தாம் நஃபில்களை (கூடுதலான வணக்கங்களை) அழகிய முறையில் நிறைவேற்ற வேண்டும். கவனமில்லாதவர்கள் அதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். சிறுவர்களுக்கு முன்மாதிரி ஆகுங்கள். அல்லாஹ்வின் அருளால் 96 நாடுகளின் பிரதிநிதிகள் இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டனர் என்று இறுதிநாள் உரையில் கூறினேன். ஒவ்வொரு வருடமும் இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இது சம்பந்தமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வார்த்தைகளைப் படித்து விட்டு பல்வேறு நாடுகளிலிருந்து மக்கள் வருவதைப் பார்க்கும் போது நன்றி கூறுதலின் உணர்வு அதிகரிக்கிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதற்காக சமுதாயங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. மிக விரைவில் அவர்கள் வந்து உங்களுடன் இணைவர்.

அல்லாஹ்வின் அருளால் சிறிது சிறிதாக இம்மக்கள் வந்து இணைகின்றனர். அஹ்மதி அல்லாத முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாதவர்களும் அஹ்மதிய்யத்தில் இணைகின்றனர். முதன் முறையாக ஜல்ஸாவில் கலந்து கொள்கிற அஹ்மதிகள் ஜல்ஸாவின் சூழ்நிலையால் நல்ல தாக்கத்தைப் பெறுகின்றனர். அதே நேரத்தில் முஸ்லிம் அல்லாதவர்களும் தமது நிலையைப் பற்றி கூறுகின்றார்கள். ஜமாஅத்தின் அமைப்பு, ஜல்ஸா ஏற்பாடுகள் ஆகியவை பற்றி கவரப்படாமல் இருக்கவே முடியாது. சிலரது கருத்துக்களை ஜல்ஸாவில் கேட்டு விட்டோம். அஹ்மதியல்லாதவர்கள் இதனைக் கற்பனைக் கூட செய்ய முடியாது. இத்தனை ஏற்பாடுகளை இவ்வளவு நிதானமாக தன்னார்வத் தொண்டர்கள் மூலம் செய்யப்படுவது மட்டுமின்றி பொதுவான வாழ்க்கை முறையில் பல்வேறு தொழில் செய்யக்கூடிய அந்த தன்னார்வத் தொண்டர்கள் இவ்வளவு திரண்ட மக்கள் கூட்டத்தை எவ்வாறு சமாளிக்கப் போகிறோம் என்ற தயக்கமே அவர்களிடம் இல்லை. ஆனால், குழப்பம் செய்யக்கூடிய ஷய்த்தானிய இயல்பினரின் கூட்டம் எந்த அளவுக்கு ஆகி விடும் என்றால் அமைதியாக உட்காரக்கூடிய வாய்ப்புக்கூட அவர்களுக்கு கிடைக்காது. நமது மக்கள் நிதானமாக பணி செய்வது அவர்களை பொருத்த வரையில் மிகவும் மனம் கவரும் விஷயமாகும். பல்வேறு தொழில் செய்யக்கூடியவர்கள் ஜல்ஸாவில் அவர்கள் செய்யும் வேலையோ அவர்களுக்கு முற்றிலும் தொடர்பில்லாத வேலையாகும். உதாரணமாக உணவு சமைப்பவர்கள், பல்வேறு பதவி வகிக்கும் அதிகாரிகள், நல்ல அரசு வேலையில் இருப்பவர்கள், தொழிலதிபர்கள் ஆவர். அதுபோன்ற மற்ற பிரிவுகள்: சுத்தம் செய்யும் பிரிவு போன்ற எண்ணற்ற பிரிவுகள் உள்ளன. இவர்கள் அனைவரும் தன்னலம் இன்றி பணி செய்கின்றனர். இந்த அழகு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தொண்டர்களிடம் மட்டுமே காண முடியும். பிறகு அவர்கள் அதனால் கவரப்படாமல் இருக்கவே முடியாது. தண்ணீர் வழங்குதல் கூட மக்களை மிகவும் கவர்ந்துள்ளது. பல்வேறு இடங்களில் உள்ள

பாதுகாப்புப் பணிகள் பல்வேறு முறைகளில் நடைபெறுகிறது. பல்வேறு ஆண், பெண் தொண்டர்கள் புன்முறுவலுடன் தமது பணியைச் செய்வது அவர்களை கவராமல் இருக்கவே முடியாது. ஜமாஅத் பற்றிய இவர்களது கருத்துக்களும் உயர்வைப் பெறுகின்றன. உதாரணமாக துருக்கியைச் சேர்ந்த சில மார்க்கக் கல்வியைக் கற்றுத் தரும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் குழு வந்திருந்தது. சிலர் ஹதீஸ்களிலும் சிலர் தஸவுஃப் (சூஃபியிஸம்) பற்றிய கல்வி நிபுணர்களாக இருந்தனர். இன்னும் சிலர் பல துறைகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இவர்கள் ஜல்ஸாவின் சூழலையும் ஏற்பாடுகளையும் கண்டு மிகவும் கவரப்பட்டனர். சிலர் இதுபற்றி கூறத் தொடங்கும் போது அவர்களிடம் இதைப் பற்றி பேசுவதற்கு வார்த்தைகளே இல்லை என்பது போன்று தோன்றியது. சிலர் முற்றிலும் வாயடைத்துப் போயினர். இவர்கள் எத்தகைய மக்கள் என்று எண்ணி வியப்பில் ஆழ்ந்து விட்டனர். எவ்வாறிருப்பினும் அவர்களுக்கு தமது சமுதாயத்தைப் பற்றி பயம் உள்ளது. எனவே அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ள ஒருவேளை தைரியமில்லாமல் போகலாம். ஆனால் ஜல்ஸாவுக்குப் பிறகு எதிரிகளுக்கு இவர்கள் தாமே பதிலளிக்கத் தொடங்கி விடுவர் என்று நம்புகிறேன். குறைந்தபட்சம் உண்மை என்ன என்பதையாவது பார்த்து விட்டனர். இது அல்லாஹ்வின் அருள்களுள் ஒரு பெரும் அருளாகும். அல்லாஹ் மற்றவர்களின் சந்தேகங்களை இந்த ஜல்ஸா மூலமாக அகற்றி உள்ளான். இந்த ஜல்ஸா சில தூய ஆன்மாக்களின் வழிகாட்டலுக்கும் காரணமாக அமையும். அன்னியர்களிலிருந்தும் நமது ஜமாஅத் என்னை சந்தித்த போது நமது தொண்டர்களின் பணிக்காக வெகுவாகப் பாராட்டி நன்றி தெரிவித்தனர். அவர்களின் தரப்பிலிருந்து அவர்களின் உணர்வுகளையும் நன்றியையும் நமது ஆண், பெண் தொண்டர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்று வெளியிலிருந்து கடிதங்கள் மூலமாகவும் போன் மூலமாகவும் தூதுச் செய்தி அனுப்புகின்ற மக்களும் ஏற்பாடுகளைப் பார்த்து கவரப்பட்டுள்ளனர். எப்போதும் அவ்வாறே நடக்கின்றது. ஒவ்வொரு முறையும் புதிய அனுபவங்களைப் பெறுகின்றனர். M.T.A –வுக்கு நன்றி தெரிவிக்கின்றனர். தூதுச் செய்தியும் அனுப்பியுள்ளனர். அந்த தூதுச் செய்திகளை விரைவாக எவ்வளவு முடியுமோ நான் எடுத்து வைக்கிறேன். இவற்றுள் அரபு உலக நாட்டைச் சார்ந்தவை அதிகமாகும்.

**ஒரு அஹ்மதிய்யல்லாத பெண் ஏமனில் இருந்து வந்துள்ளார். அவர் கூறுகிறார்:**

நான் இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டதில் மகிழ்ச்சி அடைகிறேன். அஹ்மதி சகோதர சகோதரிகளைச் சந்தித்ததிலும் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் அஹ்மதிய்யத்தைப் பற்றி என் மனதில் இருந்த தப்பெண்ணங்களை அகற்றி சீர்திருத்தினர். அஹ்மதிய்யத்தின் சரியான தெளிவான உருவத்தை எடுத்து வைத்தார்கள். அசாதாரணமான விருந்தோம்பல் செய்ததற்காக நன்றி செலுத்துவது கடமையாகும். விருந்தாளிகளை எல்லா வகையிலும் நிம்மதியாக வைக்க முழுமையாக முயற்சி செய்யப்பட்டது.

பிறகு புதிதாக பைஅத் செய்த ஒருவர் இக்ரிமா நஜ்மி சாஹிபிடம் கூறினார். இவர் இவ்வருடம் மே 11ம் தேதி பைஅத் செய்தவர். இவர் கூறுகிறார். ஜல்ஸாவின் எல்லா ஏற்பாடுகளையும் தொலைக்காட்சியில் தான் நான் பார்த்தேன். மாஷா அல்லாஹ். ஜல்ஸா ஏற்பாடுகள் மிக உன்னதமாக இருந்தன. தொண்டர்களிடம் எந்தவொரு தவறுதலும் இல்லை. இதனை தொலைக்காட்சியில் பார்ப்பவர்களும் கூட உணர்கின்றனர். ஹாஷிம் சாஹிப் இங்கு புறப்படும் போது, கொஞ்ச நாட்களுக்கு முன்னர் சொல்லியிருந்தால் நானும் கூட இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் கலந்து கொண்டிருப்பேன். அடுத்த வருடம் நான் கண்டிப்பாக கலந்து கொள்வேன் என்று கூறினார்.

**பிறகு காபாபீரைச் சேர்ந்த ஒரு சாஹிப் எழுதுகிறார்:**

நாங்கள் மிகவும் பெருமிதத்துடன் ஜல்ஸாவைப் பார்த்தோம். ஜல்ஸாவின் ஏற்பாடுகளைப் பார்த்து, 30 ஆயிரம் மக்கள் கலந்து கொண்டிருக்கிற இந்த ஜல்ஸா மிகவும் அமைதியான முறையில் நடந்தது. இது எங்களுக்கு தூய தேனை வழங்குகிற ஒரு தேன்கூடாகத் தென்பட்டது.

**மேலும் எழுதுகிறார்:** நமது இளைஞர்கள் M.T.A அல் அரபிய்யா மூலமாக ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை அரபு உலகத்திற்காக ஒளிபரப்ப முயன்றது பாராட்டுதலுக்குரியது.

எனது முடிவுரையைப் பற்றி அவர்கள் உணர்ந்ததை எழுதுகிறார்கள்: உள்ளங்களில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது பிரியத்தை நிலைநாட்டக்கூடிய மனிதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய திரு சந்நிதியில் குனிய வைக்கக்கூடிய உரையாக இருந்தது. இந்த உண்மையை அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே எடுத்து வழங்குகிறது.

உஸாமா ஹில்லிஹ் மால்டோவாவிலிருந்து எழுதுகிறார்: உலகளாவிய பைஅத்தின் போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது எல்லா தொண்டர்களும் காலத்தின் கலீஃபாவுடைய கையுடன் தமது கையை சங்கிலியாகக் கோர்த்து பைஅத் உடன்படிக்கையை மொழிந்து கொண்டு சென்ற அந்தக் காட்சியும், அதனை சொல்லும் போது உள்ளத்தில் ஏற்படுத்திய உணர்ச்சிப் பெருக்கால் கண்ணில் நீர்மல்க அஷ்ஹது என்று பைஅத் வாசகங்களை நாங்கள் மொழிந்தோம். இந்த அருளுக்குரிய சந்தர்ப்பத்தில் நானும் அங்கு இருந்திருந்தால், இந்த ஆன்மிக வானத்து அருள்களில் இருந்து பங்கு பெற்றிருப்பேன்! ஜல்ஸாவில் கலந்து கொண்ட சகோதரர்களே! பைஅத்தைப் புதுப்பித்தல், ஜல்ஸாவின் பங்கேற்பு உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்குரியதாக ஆகட்டுமாக!

**பிறகு எழுதுகிறார்:** M.T.A –வுக்கு மிக மிக நன்றி. இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்ள முடியாதவர்களுக்கு அந்த அரிய உரைகள் சூழ்நிலைகளைப் பற்றி அறிவித்துக் கொண்டே இருந்தது. அரபி டெஸ்கின் முயற்சியும் குறிப்பிடத்தக்கது. ஜல்ஸாவின் நேரடிக் காட்சிகளை எங்களிடம் கொண்டு சேர்க்க மிகவும் முயன்றுள்ளது – ஜஸாகுமுல்லாஹ்.

**பிறகு சிரியாவில் இருந்து யாஸீன் சாஹிப் எழுதுகிறார்:**

ஜல்ஸா ஸாலானாவின் வெற்றிகரமான வேளையில் எனது மற்றும் எனது வீட்டாருடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அரபு உலகத்திற்கும் இறைவன் இந்த அருளில் இருந்து பலன் வழங்குவானாக! இவர்கள் காலத்தின் இமாமை ஏற்று உண்மையான இஸ்லாத்தை ஏற்பார்களாக! அரேபிய நகரங்களிலும் இந்த ஜல்ஸா நடக்க வேண்டும். அதன் மூலம் நாங்கள் கலந்து கொள்ள முடியும். இந்த நாடுகளில் அமைதி, சாந்தியை அல்லாஹ் நிலைநாட்டுவானாக!

**யரின் சாஹிபா எழுதுகிறார்:**

ஜல்ஸா ஸாலானா நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடந்ததைப் பார்த்து இந்த ஜமாஅத்தின் உறுப்பினராக இருப்பதில் பெரும் பெருமிதம் ஏற்பட்டது. நான் பைஅத்தை புதுப்பிக்கிறேன். மேலும் எல்லா பைஅத் உடன்படிக்கையின் படியும் செயல்பட முயற்சி செய்வேன் என்று உறுதியளிக்கிறேன். அடுத்த வருடம் ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொண்டு அருள்களிலிருந்தும் பலன் பெற அல்லாஹ் எனக்கு வாய்ப்பினை வழங்குவதற்கு துஆ செய்யுங்கள்.

**சிரியாவிலிருந்து உமைய்யா அமத் சாஹிபா எழுதுகிறார்:**

ஜல்ஸா ஸாலானாவில் உலகளாவிய பைஅத்தின் வேளையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். மேலும் கூறுகிறார்: இவ்வருடம் ஜல்ஸாவில் கலந்து கொள்ள எல்லா முயற்சியும் செய்து எனது நற்பேறின்மை விசா கிடைக்காததால் வர முடியவில்லை. ஆனால் ஜல்ஸாவுக்கு வரவும் சந்திக்கவும் ஆர்வம் மிக மிக அதிகமாகி விட்டது. உலகப் பெண்களின் மகிழ்ச்சி, உலகப் பொருள்கள் கிடைப்பதோடு தொடர்புடையதாக இருக்கலாம். ஆனால் எனது மகிழ்ச்சி ஹுஸூர் அவர்களின் சந்திப்பில் வருவதாகும். மேலும் எழுதுகிறார்: ஹதீகத்துல் மஹ்தி உடைய அழகிய ஆன்மீக காட்சியைக் காணும் நாள் எப்போது வரும்?

எனது எல்லாயில்லாத மகிழ்ச்சி கிடைக்கும் நாள் எப்போது வரும்? என்று எனக்குத் தெரியாது. மேலும் எழுதுகிறார்: இந்த ஆன்மீக உணவுத் தட்டை வழங்கியதற்கு மிக மிக நன்றி கூறிக் கொள்கின்றேன். நாங்கள் ஜல்ஸா ஸாலானாவைப் பார்த்தோம். குத்பாக்களிலிருந்து முழுமையாகப் பலன் பெற்றேன். அல்லாஹ் ஒவ்வொரு வினாடியும் எம்மை கிலாஃபத்தின் அருளோடு சேர்த்து வைப்பதற்கு துஆ செய்யுங்கள். எல்லா நேரமும் அதற்குக் கட்டுப்படும் நல்வாய்ப்பை வழங்குவானாக!

**பிறகு ஐக்கிய அரபு நாட்டிலிருந்து அப்துல் லதீஃப் சாஹிப் எழுதுகிறார்:**

ஜல்ஸா ஸாலானாவின் இந்த வேளையில் எமது உணர்வுப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். இலட்சக்கணக்கான அஹ்மதிகளின் உள்ளம் அன்பு, ஈமான், ரஹ்மத்தால் நிறைந்துள்ளது. நிச்சயமாக ஜல்ஸா ஸாலானா நமது உற்சாகத்தைத் தூண்டவும் நல்ல பழக்கவழக்கங்களுக்கு மேலும் வலிமையை வழங்குவற்காகவும் வந்துள்ளது. இந்த ஜல்ஸா, இறைவனின் நூர் – ஒளியை தமது வாயால் அணைக்க விரும்புபவர்களுக்கு ஓர் அறிவிப்பாகும். காஃபிர்கள் எவ்வளவு வெறுத்தாலும் அல்லாஹ் தனது ஒளியை முழுமைப்படுத்தியே தீருவான் என்ற அறிவிப்பாகும்.

**இங்கிருந்து ஜல்ஸாவில் கலந்து கொண்ட அரபு நாட்டைச் சேர்ந்த அமீமா சாஹிபா எழுதுகிறார்:**

முதன் முதலில் நான் இந்தக் கடிதத்தை தங்களுக்கு எழுதுகிறேன். ஜல்ஸா ஸாலானாவின் அசாதாரணமான வெற்றியின் வேளையில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இறைவனுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். அவன் இந்த மகத்தான ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கான காரணிகளை வழங்கினான். இறைவன் தங்களது மதிப்புமிக்க சொற்பொழிவுகளின் வழிகாட்டலின்படி நடப்பதறகான வாய்ப்பினை வழங்குவானாக! எமது சந்ததிகளையும் கூட ஜமாஅத்தின் செயல் திறனுள்ள தொண்டர்களாக ஆக்குவானாக! மேலும் எழுதுகிறார்: நமது பாகிஸ்தானிய சகோதரர்கள் பணிவு, பொறுமை, நிலைநிற்றல் என்ற அணிகலன்களுடன் பணி செய்வது போன்று அரபிகளும் கூட அந்த நல்லொழுக்கங்களை தமதாக்கியவாறு தொண்டு செய்பவர்களாவதற்கு துஆ செய்யுங்கள். இது இவரது பணிவும், சுயநலமின்மையும் ஆகும். ஏனெனில் அரபிகளும் மிகவும் உழைத்து பணிவுடன் தொண்டு செய்கின்றார்கள். எங்கெல்லாம் அவர்களிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டதோ அவர்கள் அதனை செய்கின்றனர்.

**எகிப்திலிருந்து அப்துஸ் ஸலாம் சாஹிப் எழுதுகிறார்:**

இவர் ஜல்ஸாவில் கலந்து கொண்டவர். நானும் எனது நண்பர்களும் ஜல்ஸாவினால் மிகவும் கவரப்பட்டோம். நீங்கள் கடைசி நாள் ஆற்றிய உரை உறுதியுடன் அறைகூவல் விடுக்கவும் எதிர்கொள்ளவும் ஒரு ரூஹை – உயிரை வழங்கியது. கத்மே நுபுவ்வத்தின் மீது நமது ஈமானை உறுதியாக்கியது. எமது அமானிதங்களையும் பொறுப்புகளையும் சரிவர நிர்வகிக்கும் வாய்ப்பை அல்லாஹ் எங்களுக்கு வழங்குவதற்காக துஆ செய்யுங்கள். விருந்தினருக்கு கண்ணியம் மற்றும் விருந்தோம்பலின் வியத்தகு அடையாளம் காணப்பட்டது. எல்லா இடத்திலும் அல்லாஹ்வின் தோற்றம் தென்பட்டது. உயர் நல்லொழுக்கங்கள் தென்பட்டது. ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்களுக்கு எல்லா இடத்திலும் இஸ்லாம் மார்க்கம், திருக்குர்ஆன், ஹஸ்ரத் ஸய்யதுனா முஹம்மத் (ஸல்) அவர்களுடைய தோற்றமே தென்பட்டது. அல்லாஹ்வின் மலக்குகளின் அண்மையை உணர முடிந்தது. அவர்களே எல்லா பணியையும் நிர்வகித்து வந்ததாகத் தென்பட்டது. அல்லாஹ் இந்த ஜல்ஸாவை பலரது நேர்வழிக்குக் காரணமாக்குவானாக!

**பிறகு எகிப்திலிருந்து ஒரு புதிய அஹ்மதிப் பெண் எழுதுகிறார்:**

முதலில் M.T.A –ல் ஜல்ஸாவைப் பற்றி கேட்டேன். அந்த நாள் வந்தது. இறை அருளால் அந்நாளில் நான் ஹதீகத்துல் மஹ்தி வந்தேன். அங்கு கலீஃபத்துல் மஸீஹ் வந்திருந்தார்கள். உலகளாவிய பைஅத்தில் நாங்கள் (கணவன் – மனைவி) கலந்து கொள்ள முடியவில்லை. அந்த இடத்திற்குச் செல்வதற்கு எமக்கு கார்டு

தரப்படவில்லை. சிறு குழந்தை இருந்ததால் நான் குழந்தைகள் வைத்திருப்பவர்கள் சிறப்பான கூடாரத்திற்கு போக வேண்டியதாயிற்று. அங்கும் இடம் இல்லாததால் வெளியில் நின்றேன். தொலைக்காட்சியில் பைஅத் காட்சியைக் கண்டேன். அப்போது ஜமாஅத்திற்காகவும் தங்களுக்காகவும் துஆ செய்து கொண்டிருந்தேன். ஜமாஅத்திடம் இருந்து கட்டுப்படுதலின் பாடத்தைக் கற்றதாக உணர்ந்தேன். ஏனெனில் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் ஜமாஅத்திற்கு அமைப்புக்கு கட்டுப்பட்டவாறு குழந்தையை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தேன். ஏற்பாடு செய்தவர்களுக்காக உள்ளத்தில் துஆ வெளிப்படும் அளவுக்கு உள்ளம் மென்மை அடைந்தது. அவர்கள் விருந்தோம்பல் மற்றும் வரவேற்கும் முறையை எமக்கு கற்றுத் தந்தனர். பணி செய்பவர்களின் முகத்திலிருந்த புன்முறுவலிலிருந்து அவர்களது நல்லொழுக்கம் தென்பட்டது. விருந்தினரை வீட்டில் உள்ளவரைப் போன்று கவனித்தனர். எனது குழந்தை பொதுவாக தனது தந்தையுடன் ஜல்ஸா திடலில் இருந்து தூங்கி விடும். பிறகு தக்பீர் முழக்கம் கேட்டு எழுந்து தானும் முழக்கமிடும். துஆ செய்யுங்கள். எனக்கு ஒவ்வொரு வருடமும் ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கட்டும். ஏனெனில் ஒருமுறை பார்த்து விட்டோம். இனி எங்களால் ஜல்ஸாவை விட முடியாது.

**பிறகு மொரோக்காவிலிருந்து ஒரு சாஹிப் எழுதுகிறார்:**

ஜல்ஸா ஸாலானாவின் வெற்றிகரமான வேளையில் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். அடுத்த ஜல்ஸாவை மக்கா முகரமாவில் நடத்தும் காலத்தை அல்லாஹ் கொண்டு வருவானாக! என்று துஆ செய்கிறேன். மக்காவில் ருக்னுக்கும் மகாமுக்கும் இடையில் உலகளாவிய பைஅத் நடைபெறும் காட்சியை காண வேண்டும்.

இவை சில கடிதங்களும், சில அரபிகளிடமிருந்து வந்தவையும் ஆகும். இம்முறை ஜல்ஸாவுக்கு அமெரிக்காவிலிருந்து கணிசமாக வந்திருந்தனர். 30 ஐ விட அதிகமான பூர்வீக அமெரிக்கர்கள் வந்திருந்தனர். என்னை சந்தித்தனர். ஜல்ஸாவில் கலந்து கொண்டதற்காக அல்லாஹ்வுக்கு நன்றியும் புகழும் செலுத்தியவாறு உணர்வு பொங்கிக் காணப்பட்டனர்.

ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் தொடர்பு பற்றிய அவர்களது உணர்வுகள் வார்த்தையால் விளக்க முடியாதவையாகும். எந்த அளவு உணர்வு பொங்கிக் காணப்பட்டனர் என்றால் அவர்களால் பேசவும் கூட முடியவில்லை. கிலாஃபத்துடன் கொண்ட நேசம், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மீது நேசம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட நேசம் ஆகியவை அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்காக மட்டுமே அவர்களிடம் நிறைந்து காணப்பட்டது. அல்லாஹ் இவர்கள் அனைவரின் ஈமான் மற்றும் உறுதிப்பாட்டை மேலும் அதிகரிப்பானாக!

அமெரிக்க அஹ்மதி, அரபியர்கள் மற்றும் மற்றவர்கள் யாரெல்லாம் ஜல்ஸாவில் கலந்து கொண்டார்களோ அவர்களின் உள்ளங்களில் உருவாகியுள்ள புரட்சி நிரந்தரமாக இறை நெருக்கத்தின் வழியைக் காட்டுபவையாக அமையட்டுமாக! நான் ஏற்கனவே சுட்டிக் காட்டினேன். M.T.A உலகை ஒன்றுகூட்டுவதிலும், ஜல்ஸா மற்றும் பிற நிகழ்ச்சிகளைக் காட்டுவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. அதனால் எல்லா நாட்டின் அஹ்மதிகளும் M.T.A வின் தொண்டர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றனர். இம்முறை ஜல்ஸா நாட்களில் இடைப்பட்ட நேரத்திலும் கூட நிகழ்ச்சிகள் காட்டப்பட்டன. நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குபவர்களாக புதிய இளைஞர்களின் முகம் வந்தது. M.T.A தனது பழைய முறையை மாற்றியிருந்தது. இது பலருக்குப் பிடித்திருந்தது. நமது நிகழ்ச்சிகள் செயற்கைத்தனம் இல்லாதவை. அதில் கூடுதல் இருக்காது. மற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் திரையில் வருபவர்களும் அவர்களது பேச்சுக்களிலும் செயற்கைத்தனம் இருக்கும். ஒவ்வொருவரும் பொய்யின் மூலமே தமது கருத்தை தெரிவிக்கவும் செய்வர். இன்று அல்லாஹ்வின் அருளால் M.T.A மட்டும் தான் இந்த வீணானவைகளிலிருந்து 24 மணி நேரமும் தூய்மையாக உள்ளது. நமது அறிவிப்பாளர்கள் கூட செயற்கைத்தனமின்றி பற்று விசுவாசத்துடன்

நிறைந்தவர்களாக காணப்பட்டனர். அதைப் பற்றிய விசுவாசத்தை திரையில் கண்டனர். அதனை பாரட்டவும் செய்தனர். அல்லாஹ் இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் வழங்கியவர்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவர்கள் அதனை ஒளிபரப்புபவர்கள் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக! நான் என் சார்பாகவும் அஹ்மதிய்யா உலகின் சார்பாகவும் நன்றியைத் தெரிவிக்கிறேன். அல்லாஹ் M.T.A -வில் பணியாற்றுகின்ற ஆண், பெண்களின் விசுவாசத்தை அதிகப்படுத்துவானாக! பாராட்டு வார்த்தைகளை தன்மீது கூறப்படுவதைக் கேட்கும்போது ஒரு நம்பிக்கையாளரின் கடமை மேலும் பணிவைக் காட்டியவாறு நன்றியை கவனத்தில் கொள்ளுதல் ஆகும். நமது ஆண், பெண் தொண்டர்களும் கூட இதனைக் கேட்டு அல்லாஹ்வின் முன் மிக அதிகமாகக் குனிய வேண்டும். அப்போது தான் அல்லாஹ் அவர்களின் தகுதிகளுக்கு மேலும் பொலிவூட்டுவான். பொதுவாக அல்லாஹ்வின் அருளால் நமது ஆண், பெண் தொண்டர்கள் தமது எல்லா திறமைகளுடன் கூடி ஜல்ஸாவிற்காக டியூட்டி கொடுக்கின்றனர். இதனை முன்னர் குறிப்பிட்டேன். ஒவ்வொரு வருடமும் கூறுகிறேன். இம்முறை வாழ்வை அர்ப்பணித்த வக்ஃபே நவ் ஆண், பெண் தொண்டர்களுக்கு முக்கிய பணி தரப்பட்டது. அவர்களும் அதனை மிகவும் பொறுப்புடன் செய்தனர். அவர்களின் இன்சார்ஜ் இடம் பல பொறுப்புகள் தரப்பட்டன. எனக்கு மிக நல்ல அறிக்கை கிடைத்துள்ளது. அல்லாஹ் இவர்களுக்கு அர்ப்பணிப்பின் உயிரை விளங்கி பணி செய்யும் வாய்ப்பு வழங்குவானாக!

**ஜெர்மனி ஜல்ஸாவுக்குப் பிறகு ஒருவர் எனக்கு எழுதியிருந்தார்.**

ஜெர்மனி ஜல்ஸாவில் கலந்து கொண்டேன். அங்கு லஜ்னாவின் ஹாலில் மிகவும் சிறப்பாகத் தெரிந்த விஷயமாவது, யாரும் அமைதிப்படுத்தாமலேயே பல பெண்கள் அமைதியாக ஜல்ஸா நடவடிக்கைகளைக் கேட்டனர். இதே கருத்து கொண்ட கடிதம் அமெரிக்காவிலிருந்தும் வந்தது. ஜல்ஸாவில் முதல் முறையாக கலந்து கொண்டுள்ளேன். நான் பார்த்தேன். இங்கு U.K ஐப்போன்று பெண்களை அமைதிப்படுத்த பல்வேறு இடங்களில் அறிவிப்புப் பலகை தாங்கிய பெண்கள் இல்லை. இருப்பினும் பெண்கள் ஒழுங்குடன் அமைதியாக இருந்தனர். இந்த ஒழுங்குமுறை U.K -விலும் இருக்க வேண்டும் என எழுதியிருந்தார். ஜெர்மனி, அமெரிக்காவிலிருந்து வந்த இந்த கடிதம் பற்றி முதலில் நான் கவனம் செலுத்தவில்லை. எழுதுபவர் U.K லஜ்னாக்களின் பலவீனத்தை மிகைப்படுத்தி எழுதியுள்ளார் என்றும் எனக்கு தெரியும். குறைந்தபட்சம் எனது உரையின் போது கார்டை தூக்கியவாறு அமைதிப்படுத்தும் எந்தவொரு ஆண், பெண் தொண்டர்களையும் காணாதது கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். அதெல்லாம் இல்லாமலேயே அமைதியின் தரம் மிக உன்னதமாக இருந்தது. மிகவும் ஆர்வத்துடன் ஜல்ஸாவின் உரையைக் கேட்பதில் கவனம் காணப்பட்டது எனக்கு தெரிய வந்தது. பொதுவாகவே மிகவும் அமைதியுடன் ஜல்ஸாவின் நடவடிக்கைகள் கேட்கப்பட்டதாக தெரிய வந்தது. எந்த வகையான அசௌகரியங்களும் இல்லை. இந்த அடிப்படையில் ஜல்ஸாவில் கலந்து கொண்ட பெண்களுக்கும் பெண் தொண்டர்களுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். கலந்து கொள்பவர்களின் நன்றி காட்டலானது வருங்காலத்தில் இதை விட அதிகமாக அமைதி காத்து ஜல்ஸாவின் அருள்களை நெருங்க முயற்சி செய்ய வேண்டும். அதனை தமது வாழ்வின் அங்கமாக்க வேண்டும். உங்கள் வீடுகளை அல்லாஹ், ரஸூலின் போதனைகளுக்கேற்ப கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் இது பெண்களின் பெரும் பொறுப்பாகும். இதுவே உங்களது உண்மையான நன்றி கூறுதல் ஆகும்.

வேலை செய்யும் தொண்டர் ஒருவரின் உணர்வு குறித்து மற்றவர் ஒருவர் எனக்கு கூறினார். அதனைக் கூறுகிறேன். சுவீடனிலிருந்து வந்த ஒரு நகர மேயர் கூறினார். ஒரு பிரிவின் நாஸிம் காட்சிகளைப் பார்ப்பதற்காக என்னை உயரமான இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து ஜல்ஸாவின் எல்லா காட்சியும் தென்பட்டது. கூடாரங்கள் பாதைகள் எல்லாம் தென்பட்டன. நீங்கள் காணுகின்ற இந்த அழகிய காட்சியை உருவாக்க எங்களுக்கு இரு வாரங்கள் பிடித்தன. அதில் நானும் ஒருவனாவேன். ஒரு வாரத்திற்குப் பிறகு இவை அனைத்தையும் நாங்கள் களைத்து விடுவோம். பிறகு வெறும் மைதானம் மட்டுமே இருக்கும்

என்று உணர்வுபொங்க அந்த தொண்டர் கூறினார். உழைத்து வேலை செய்கிறார். உணர்வு பொங்க அதனைப் பற்றிக் கூறவும் செய்கிறார்.

எவ்வாறிருப்பினும் உங்களுக்கு உள்ள கடமையாகும். எந்த அளவுக்கு அனுமதி உண்டோ அந்த அளவுக்கே இப்பகுதியைப் பயன்படுத்த முடியும். ஒவ்வொரு வருடமும் இப்படியே நடக்கிறது. குறிப்பிட்ட காலம் இதனைப் பயன்படுத்துகிறோம். பிறகு எடுத்தும் விடுகிறோம். இந்த தொண்டர்கள் மிகவும் உழைத்து இதனை பொருத்தவும் செய்கின்றனர். எல்லாவற்றையும் அமைக்கின்றனர். பிறகு களைத்து சுத்தமும் செய்கின்றனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக! இம்மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு, இந்த வாய்ப்பளித்த அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். வசதிகள், ஏற்பாடுகள் செய்து தந்த தொண்டர்களுக்கும் நன்றி செலுத்த வேண்டும். தொண்டர்களும் நன்றி செலுத்த வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு சேவை செய்ய வாய்ப்பளித்துள்ளான். இரு தரப்பின் நோக்கமும் ஒன்றே. அல்லாஹ்வுக்காக நாம் ஒன்றாகி இறைவனது மார்க்கமாகிய இஸ்லாத்திற்கு தொண்டு செய்யும் கடமையை நிறைவேற்ற முயற்சி செய்கிறோம். அல்லாஹ் நம் அனைவருக்கும் இக்கருத்தை புரிந்து எப்போதும் தமது ரப்பின் முன் குனிந்திருக்கச் செய்வானாக! அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது எப்போதும் நமது நோக்கமாக இருக்கட்டுமாக! உண்மையான யதார்த்தமான அஹ்மதி முஸ்லிம் ஆவோமாக. உலகில் இஸ்லாத்தின் உண்மையான போதனையைப் பரப்புபவர்களாகவோமாக! அப்போதுதான் காலத்தின் இமாமின் ஜமாஅத்தில் இணைந்ததற்கான கடமையை நிறைவேற்றி உண்மையான நன்றி செலுத்தும் அடியார்கள் ஆவோம். அதனைப் பெற நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வழிகாட்டலைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்கும் உண்மையை வெளிப்படுத்துவதற்கும் முதல் அம்சம் நீங்கள் உண்மை முஸ்லிம் என்ற முன்மாதிரியைக் காட்ட வேண்டும். இரண்டாவது அம்சம், அதன் முழுமைகளையும் சிறப்புகளையும் உலகில் பரப்புங்கள். பிறகு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: உண்மையான ஈமானின் ரூஹை அல்லாஹ் ஊத விரும்புகிறான். அதனை இந்த இயக்கத்தின் மூலமே ஊத விரும்புகிறான்.

எனவே நான் ஆரம்பத்தில் கூறினேன். தூய மாற்றத்தை ஏற்படுத்துவது தான் ஜல்ஸாவின் அசல் நோக்கமாகும். அல்லாஹ் நமக்கு தூய மாற்றத்தை ஏற்படுத்துவானாக! நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுபவர்களாவோமாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 29.07.2011**

Translated by : **Maulavi M. NIZAMUDEEN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**